**CC.No.12/2015**
Dated:31.07.2026

அ.சா.4, ஞானமூர்த்தி த/பெ.குமார்

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எழுதிய தாளில் கையெழுத்து செய்தேனா அல்லது எழுதாத தாளில் கையெழுத்து செய்தேனா என்றால் எழுதிய தாளில் தான் கையெழுத்து செய்தேன். போலிசார் வரைந்த வரைபடத்தில் என் வீடு இருந்ததா என்றால் இல்லை. என்னை எந்த போலிசார் விசாரித்தார்கள் என்றால் வடவணக்கம்பாடி போலிசார் விசாரித்தார்கள்.

அ.சா.2 ஐ எதிரிகள் அடித்ததாக கூறியுள்ள நிலையில் அவர் தனிப்பட்ட முறையில் ஏதும் புகார் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. நான் கையெழுத்து செய்வதற்கு முதல் நாள் இரவு தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். போலிசார் யார் யாரை எல்லாம் விசாரித்தார்கள் என்றால் என்னையும் அ.சா.2 சௌந்தர்ராஜனையும் விசாரித்தார்கள்.

காவல்நிலையத்திற்கு யார் யார் எல்லாம் சென்றோம் என்றால் நானும் சௌந்தர்ராஜன் மட்டும் சென்றோம். எனது ஊர் எந்த காவல்நிலையத்தின் எல்லைக்குள் இருக்கிறது என்றால் வடவணக்கம்பாடி காவல்நிலைய எல்லைக்குள் உள்ளது. நான் அடிக்கடி காவல்நிலையத்திற்கு அ.சா.2 சௌந்தர்ராஜனுடன் சென்று வருவேன் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.07.31 14:04:35 +0530